**அமர்வு வழக்கு எண். 48/2021**

**PW 38: ரவிச்சந்திரன்**

**தேதி : 01.04.2026**

**(1ம் எதிரி கலையரசன், 3ம் எதிரி பிரசாத், 4ம் எதிரி ஷேக்தாவுத், 5ம் எதிரி கோகுல்நாத், 6ம் எதிரி கிரிதர் (எ) கிரி ஆகிய எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள். அவர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.) (8ம் எதிரி சீனிவாசன் ஆகியோர் ஆஜராகவில்லை. அவர்களுக்காக பிரிவு 317 குவிமுச–ன் படி மனு தாக்கல் செய்து எதிரியின் அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**(2ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என Crl.M.P.208/2024 உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது).**

**(R.O.C.No.34833/2025/F1, நாள்.13.06.2025–ன் படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற காணொலி காட்சி விதிகள் 2020–ன் படி சேலம் முதன்மை மாவட்ட நீதிமன்ற காணொலி காட்சி அறையிலிருந்து திரு.ரவிச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக ஆஜராகி திருமதி.ஜெயந்தி, இருக்கை எழுத்தர் நிலை 1 அவர்கள் மூலம் உறுதி செய்யப்பட்டு அவர்கள் மூலமாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்.) (மேலும் சாட்சிக்கு காணொலி காட்சி வழியாக விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை காணொலி காட்சி மூலமாக கணினி திரையிலேயே சாட்சிக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் காணொலி காட்சி வழியாக ஆஜராகியுள்ளார். விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை காணொலி காட்சி மூலமாக கணினி திரையிலேயே எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

<u>Crl.M.P. No. 132/2026–ல் 02.02.2026 அன்று பிறப்பித்த உத்தரவின் பேரில் சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1, 4, 5 மற்றும் 8 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு பட்டியலினத்தை சேர்ந்த நபர் இறந்தமையால் SC/ST சட்ட விதி 7ன் கீழ் உங்களுக்கு 12.03.2021 வழக்கை விசாரிக்க உத்தரவு பெறப்பட்ட நாள் என்று சொன்னால் சரிதான். உங்களுக்கு முந்தைய

விசாரணை அதிகாரிக்கு எப்போது இறந்துபோன நபர் பட்டியலினத்தை சேர்ந்தவர் என்று தெரிய வந்தது என்றால் 12.03.2021 ஆம் தேதியன்று பட்டியலினத்தை சார்ந்தவருக்கு எதிராக குற்றம் இழைக்கப்பட்டது என்று தெரிய வந்ததால் அன்றைய தினமே உத்தரவு பெறப்பட்டது. உங்களுக்கு முந்தைய ஆய்வாளர் அ.சா.37 சிதம்பரபாரதியின் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளீர்களா என்றால் அவர் விசாரணை அதிகாரியாக இருப்பதால் அவரது வாக்குமூலம் பதிவு செய்யவேண்டிய அவசியமில்லை. நீங்கள் விசாரணை அதிகாரி என்பதால் நீங்கள் சிதம்பரபாரதியின் வாக்குமூலத்தை பதிவு செய்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. SC/ST Act விதி 7(2) ன் படி இறுதி அறிக்கை 60 நாட்களுக்குள் முடித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் அவ்வாறு நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 17.05.2021 ஆம் தேதியன்று தான் நீதிமன்றத்தில் இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் விசாரணை உரிய காலத்தில் முடிவடையாததால் நீதிமன்றத்தில் அனுமதி பெற்று மேல் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றத்தில் அனுமதி பெற்றதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான் நீதிமன்றத்தில் உரிய காலத்தில் காலநீட்டிப்பு அனுமதி பெற்றுள்ளேன். SC/ST Act விதி 7(2A) ன்

படி உங்கள் இறுதி அறிக்கை சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அ.சா.22 நவீனை நான்தான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். அ.சா.22 நவீன் உங்கள் விசாரணையில் ரஞ்சித்குமாரை உயிருடன் ஆம்புலன்சில் வேலாயுதம்பாளையம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். காயம்பட்ட நபர் மருத்தவமனைக்கு சென்றால் மருத்துவமனையிலிருந்து சம்மந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு இன்டிமேசன் அனுப்புவார்கள் என்றால் பொதுவாக அனுப்புவார்கள் இந்த வழக்கில் அனுப்பவில்லை. வேலாயுதம்பாளையம் மருத்துவமனையிலிருந்து உங்களுக்கு இன்டிமேசன் வந்ததா என்றால் வரவில்லை. நீங்கள் வேலாயுதம்பாளையம் மருத்துவமனையில் உள்ள மருத்துவரை நீங்கள் விசாரித்துள்ளீர்களா என்றால் விசாரிக்கவில்லை. மேலும் விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டதா என்று விசாரித்தீர்களா என்றால் விபத்து பதிவேடு வேலாயுதம்பாளையம் மருத்துவமனையில் இல்லை. நீங்கள் அவ்வாறு விபத்துபதிவேடு ஆவணங்களை இவ்வழக்கில் மறைத்துவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. ரஞ்சித்குமாரை அமராவதி மருத்துவமனையில் முதல்முதலாக பரிசோதித்து ரஞ்சித்குமார் இறந்துவிட்டார் என்று உறுதி செய்த மருத்துவவரை நீங்கள் இவ்வழக்கில் விசாரித்துள்ளீர்களா என்றால் அமராவதி மருத்துவமனையில் வழக்கு சமயத்தில் எதுவும் இல்லை என்பதால்

விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் அ.சா.பொ.16 Hero Honda TN48 J 1796 என்ற வாகனத்தை திருச்சியை சேர்ந்த அருண் என்பவர் முதல்முதலில் வாங்கியுள்ளார் என்றும் பின்னர் நாமக்கல்லில் RS Enterprise–ல் எக்சேன்ஜில் விற்பனை செய்துள்ளார் என்றும் பின்னர் ஜெய்லுதீன் வாங்கியுள்ளர் என்றும் பின்னர் மாயாண்டி என்பவர் வாங்கியுள்ளார் ஆகியவற்றிற்கான ஆவணங்கள் எதையும் நீங்கள் பார்த்துள்ளீர்களா, கைப்பற்றியுள்ளீர்களா என்றால் மேற்சொன்ன நபர்கள் வாகனத்தை வாங்கி வாங்கி விற்றுள்ளார்கள் சம்பவ சமயத்தில் நவீன் என்பவர் தான் தனது சொந்த உபயோகத்திற்காக அ.சா.பொ.16 வாகனத்தை பயன்படுத்தி வந்துள்ளார். அ.சா.பொ.16 வாகனத்தை திருச்சி வட்டார போக்குவரத்து கழகத்தில் படிவம் 29 மற்றும் படிவம் 30 ஆகிய ஆவணங்கள் இருக்கிறதா என்று கேட்டுத்தெரிந்துகொண்டீர்களா என்றால் அதைப்பற்றி விசாரிக்கவில்லை. அ.சா.ஆ.15 TN48 J 1796 பதிவு எண் கொண்ட வாகனத்தின் விற்பனை ரசீதில் 2019 என்பது அடிக்கப்பட்டு 2020 என்று திருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் அதே ரசீதில் மேலே 07.02.2020 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன 07.02.2020 என்பது தேதி என்று குறிப்பிடாத இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். திருச்சி சிறையில் மணிகண்டனுக்கும் ஜெகன் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டது என்றும் இறந்துபோன ரஞ்சித்குமார் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும் இது குறித்து சிறைத்துறை அதிகாரிகளை

நீங்கள் சாட்சியாக விசாரித்து அதற்குரிய ஆவணங்களை கைப்பற்றியுள்ளீர்களா என்றால் கடந்த 21.04.2021 ஆம் தேதியன்று திருச்சி மத்திய சிறை கண்காணிப்பாளருக்கு இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன ரஞ்சித்குமார், ஜெகன் மற்றும் மணிகண்டன் ஆகியோர்கள் மனு தாக்கல் செய்த மனுவின் நகல் கேட்டு மனு செய்திருந்தேன் ஆனால் நகல் கிடைக்கவில்லை சாட்சிகளை விசாரித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் ஜெகனை விசாரிக்கவில்லை. 1ம் எதிரிக்கும் இறந்துபோன ரஞ்சித்குமாருக்கும் எலெக்டிரிக்கல் வேலை பார்த்து பணம் பிரிப்பதில் பிரச்சனை உள்ளது என்று குறிப்பிட்டுள்ளீர்கள் அது எங்கு வைத்து பிரச்சனை ஏற்பட்டது என்றும் எவ்வளவு பணம் குறித்து பிரச்சனை ஏற்பட்டது என்று தெரிந்துகொண்டீர்களா என்றால் விசாரித்தேன் வேலாயுதம்பாளையம் பைபாஸ் ரோடு அருகில் உள்ள மதுபானக்கடை அருகில் பணப்பிரச்சனை ஏற்பட்டது என்று தெரிந்து கொண்டேன் எவ்வளவு பணம் பிரித்துக்கொள்வதில் பிரச்சனை ஏற்பட்டது என்று தெரியவில்லை அவர்கள் கூலிப்பணம் பிரித்துக்கொள்வதில் பிரச்சனை ஏற்பட்டது. இறந்துபோன ரஞ்சித்குமார் எலக்டிரிக்கல் வேலை எதுவும் படிக்கவில்லை. 1ம் எதிரி கலையரசன் Marine Engineering படித்துள்ளார் என்றும் அவர் எந்த எலக்டிரிசியன் வேலையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மதுபானக்கடையில் தகராறு நடந்ததற்காக மதுபானக்கடையில் உள்ளவர்களை

சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் விசாரிக்கவில்லை இறந்துபோன ரஞ்சித்குமாரின் மனைவி வான்மதியிடம் ரஞ்சித்குமார் கூறியுள்ளார் அவரை நான் விசாரித்துள்ளேன். நீங்கள் மதுபானக்கடையில் உள்ளவர்களை விசாரித்தீர்கள் என்றும் அவ்வாறு தகராறு எதுவும் நடைபெறவில்லை என்பதால் நீங்கள் வான்மதியிடம் விசாரித்து தெரிந்துகொண்டதாக பொய்யாக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சம்பவ இடத்திற்கு சென்று நீங்கள் புதிதாக வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தீர்களா மேலும் CCTV கேமராக்கள் உள்ள இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தொலைவு உள்ளது என்ற தெரிந்துகொண்டீர்களா என்றால் ஏற்கனவே வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்து வைத்திருந்ததால் நான் புதிதாக எதுவும் தயார் செய்யவில்லை. இவ்வழக்கில் 65 பி சான்றிதழ் வழங்கிய சாட்சி குழந்தைவேலை நீங்கள் விசாரித்தீர்களா என்றால் விசாரிக்கவில்லை. நீங்கள் பென்டிரைவிலிருந்து CD யில் பதிவிறக்கம் செய்ததற்காக சாட்சி குழந்தைவேலிடம் ஒரு 65 பி சான்றிதழ் வழங்கியுள்ளீர்கள் என்றால் எனக்கு முன்பு புலன் விசாரணை செய்த காவல்ஆய்வாளர்தான் குழந்தைவேலிடமிருந்து 65 பி சான்றிதழ் பெற்றுள்ளார். மின்பொருள் யாருடைய பாதுகாப்பிலோ அல்லது யார் உரிமையாளர்களோ அவர்கள் தான் 65 பி சான்றிதழ வழங்க முடியும் என்று சொன்னால் சரியல்ல. 91 கபே, அட்சயா ஹோட்டல், பெட்ரோல்பங்க் ஆகிய

இடங்களில் உள்ள சிசிடிவி பதிவுகளின் அசலை நீங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அ.சா.35 விசாலாட்சியிடமிருந்து இவ்வழக்கில் அசல் ஹார்ட்டிஸ்க், டிவிஆர் ஆகியவற்றை அனுப்பி தான் ஆய்விற்கு உட்படுத்தி ஆய்வு செய்தால் தான் அதன் உண்மை தன்மை தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. 91 கபே, அட்சயா ஹோட்டல் ஆகிய சிசிடிவி புட்டேஜ் காட்சிகளையும் பெட்ரோல் பங்கிலிருந்து எடுக்கப்பட்ட சிசிடிவி புட்டேஜ்களை ஒப்பிட்டு பார்க்க நீங்கள் இவ்வழக்கில் மானுடவியல் ஆய்விற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். உங்களுக்கு சட்டைக்கும் பனியனுக்கும் வித்தியாசம் தெரியும் என்று சொன்னால் சரிதான். உங்களுக்கு கருப்பு நிறத்திற்கும், நீலநிற கால்சட்டைக்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். இறந்தநபரின் உடலிலிருந்து மஞ்சள் நிற பனியன் மட்டும் தான் எடுக்கப்பட்டது அவர் சட்டை அணியவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் கருப்பு நிற புளூ கலரால் எழுதப்பட்ட கால்சட்டைதான் அணிந்திருந்தார் என்றும் அவர் நீல நிற கால்சட்டை அணியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி சூர்யா மஞ்சள் நிற டீசர்ட் பனியன் அணிந்திருந்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றும் ஆனால் அவர் பிரவுன் கலர் டீசர்ட் அணிந்திருந்தாக ஒப்புதல் வாக்குமுலத்தில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. 8 ஆம் எதிரி சீனிவாசன் பிரவுன் கலர் முழுக்கை சட்டை அணிந்திருந்தாக கூறியுள்ளீர்கள் என்றும் ஆனால் மஞ்சள் கலர் சட்டை

அணிந்திருந்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி பிரசாத் கருப்பு நிற ஜீன்ஸ் அணிந்திருந்ததாக கூறியுள்ளீர்கள் ஆனால் அவர் புளு சிமெண்ட் கலர் ஜீன்ஸ் அணிந்திருந்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. நீங்கள் நீதிமன்றத்தில் சரியான முறையில் உடைகளை குறித்து எதிரிகளை அடையாளம் காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. திருச்சி சிறையில் உள்ள ஜெகனும், இறந்துபோன ரஞ்சித்குமாரும் கூட்டு கொள்ளை அடித்த வழக்கில் சம்மந்தப்பட்ட நபர்கள் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி வான்மதி தனது சாட்சியத்தில் திருச்சி ரஞ்சித்குமாரும், அவர் நண்பர் ஜெகன் மற்றும் அவரது கூட்டாளிகளுடன் கேங் ராபரி செய்தததில் பழக்கமான நபர் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் சரிதான் ஆனால் விசாரணையில் கொள்ளையடித்த வழக்கில் சம்மந்தப்பட்டவர்கள் என்று ஆவணங்கள் எதுவும் இல்லை. இறந்துபோன ரஞ்சித்குமாருக்கும் கொள்ளை அடித்த வழக்கில் அவருக்கும் மற்ற நபர்களுக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றும் அதனை நீங்கள் இந்த வழக்கில் மறைத்துவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி வான்மதி 3 வருடமாக ரஞ்சித்குமாருடன் கள்ளத்தொடர்பில் இருந்து வந்தார் என்று விசாரித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் கள்ளத்தொடர்பில் இருந்துள்ளார். வான்மதியின் கணவர் லோகநாதனை நீங்கள் இந்த வழக்கில் விசாரித்துள்ளீர்களா என்றால் விசாரிக்கவில்லை. லோகநாதனுக்கும்

ரஞ்சித்குமாருக்கும் சம்பவத்திற்கு 15 நாட்கள் முன்பு சண்டை ஏற்பட்டு அவர் வான்மதியின் வீட்டை விட்டு சென்று விட்டார் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன ரஞ்சித்குமாரின் மனைவி புனிதவள்ளி கொடுத்த புகாரின் அடிப்படையில் சம்பவத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு ரஞ்சித்குமார் கரூர் சிறைக்கு சென்று வந்துள்ளார் என்றால் சரியல்ல. இறந்துபோன ரஞ்சித்குமார் பல முன்விரோதம் காரணமாக எதிரிகள் நிறைய பேர் இருந்துள்ளார்கள் என்றும் அவை இவ்வழக்கில் மறைக்கப்பட்டுள்ளன என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் பெறப்பட்டுள்ள சாதிச்சான்றுகள் அனைத்தும் நீங்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் வட்டாட்சியர் வழங்கியுள்ளார் என்றும் சாதிச்சான்றிதழ்கள் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னால் சொன்னால் சாதிச்சான்றிதழ் வாங்கியுள்ளேன். மாவட்ட குறியீடு, வட்டக்குறியீடு, கிராமக்குறியீடு அடங்கியுள்ள சாதிச்சான்றிதழ்கள் தான் உண்மையான சாதிச்சான்றிதழ் என்றும் நீங்கள் இவ்வழக்கில் வாங்கியுள்ளவை உண்மையான சாதிச்சான்றிதழ்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன ரஞ்சித்குமார் இந்து–போயர்நாயக்கர் என்று சொன்னால் சரியல்ல. ரஞ்சித்குமாரின் தகப்பனார் ரமேஷின் கூடுதல் குவிமுச 161 வாக்குமூலத்தில் இந்து–போயர்நாயக்கர் சமூகத்தை சேர்ந்தவர் என்று வாக்குமூலம் அளித்துள்ளார் என்று சொன்னால்  சரிதான் மேலும் அவர் மனைவி இந்து–பள்ளர் சாதியை சார்ந்தவர் என்று கூறியுள்ளார். இவ்வழக்கில்

சாதிப்பிரச்சனை முன்விரோதத்திற்கு காரணமல்ல என்று சொன்னால் சரிதான். நீங்கள் கண்ணுற்ற சாட்சிகளின் கூடுதல் வாக்குமூலங்களை நீங்கள் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றும் ஏற்கனவே ஆய்வாளர் பதிவு செய்த வாக்குமூலங்களைத்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்ற சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் குவிமுச 161 வாக்குமூலங்கள் மற்றம் மற்ற ஆவணங்கள் நீதிமன்றத்திற்கு தாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் முதல்விசாரணையில் கூறியதுபோல் எந்த சாட்சிகளும் உங்களிடம் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் மற்ற சாட்சிகளிடமிருநது பெறப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சரியான புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**Crl.M.P. No. 133/2026–ல் 02.02.2026 அன்று பிறப்பித்த உத்தரவின் பேரில் சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 3 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3ம் எதிரி முனியன் மகன் பிரசாத் எந்த வகுப்பை சார்ந்தவர் என்று உங்கள் விசாரணையில் தெரிந்துகொண்டீர்களா என்றால் இந்து–சக்கிலியர் வகுப்பை சேர்ந்தவர் என்று தெரிந்துகொண்டேன். 17.12.2020 ஆம் தேதி மாலை காவல் ஆய்வாளர் எங்கு பணியிலிருந்தார் என்பதை

தெரிந்துகொண்டீர்களா என்றால் அரியலூர் தேர்தல் பிரச்சார பாதுகாப்பு பணியில் இருந்தபோது தகவல் கிடைத்து உடனடியாக இவ்வழக்கு புலன் விசாரணைக்காக இரவு 8.00 மணிக்கு கரூர் வந்துள்ளார். நீங்கள் அனைத்து சாட்சிகளையும் மறுவிசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்ஆய்வாளர் கொடுத்த சிசிடிவி புட்டேஜ்கள் சட்டத்திற்கு உட்பட்டு சரியான முறையில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சிசிடிவி புட்டேஜ்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிரி எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் தங்களிடம் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிரியிடமிருந்து எந்தவொரு சான்று பொருட்களும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் 3ம் எதிரி கைது செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.04.01 17:35:46 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.